அசைந்தாடும் மயிலொன்று காணும்
நம் அழகன் வந்தான் என்றே சொல்வது போல் தோணும்

இசையாரும் குழல் கொண்டு வந்தான் - இந்த
ஏழேழ் பிறவிக்கும் இன்ப நிலை தந்தான்
திசைதோறும் நிறைவாக நின்றான் என்றும்
தெவிட்டாத வேணு கானம் ராதையிடம் ஈன்றான்

எங்காகிலும் எமதிறைவா இறைவா என மன நிரை அடியவரிடம்
தங்கும் மனத்துடையாள் அருள் பொங்குமுகத்துடையாள்

ஒரு பதம் வைத்து மறு பதம் தூக்கி  நின்றாட
மயிலினிறகாட      மகரகுழையாட
மதி வதனமாட      மயக்கும் விழியாட
மலரணிகலாட      மலர்மகளும் பாட
இது கனவோ நனவோ என மன நிரை முனிவரும் மகிழ்ந்து கொண்டாட

அசை போடும் ஆவினங்கள் கண்டு இந்த
அதிசயத்தே சிலை போல நின்றதுவும்  உண்டு
நிஜமான ஸுகம் என்று ஒன்று இருந்தால்
நீடுலகில் இதையன்றி வெறெதுவும் அன்று -
இசையாரும் கோபாலன் நின்று
நின்று எழுந்தெழுந்து நடமாட எதிர் நின்று ராதை பாட....

எங்காகிலும் எமதிறைவா இறைவா என மன நிரை அடியவரிடம்
தங்கும் மனத்துடையாள் அருள் பொங்குமுகத்துடையாள்
ஒரு பதம் வைத்து மறு பதம் தூக்கி  நின்றாட
மயிலினிறகாட      மகரகுழையாட
மதி வதனமாட      மயக்கும் விழியாட
மலரணிகலாட      மலர்மகளும் பாட
இது கனவோ நனவோ என மன நிரை முனிவரும் மகிழ்ந்து கொண்டாட